A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN


4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in


**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 48 / 2023**

திரு. ஆர்.கனகராஜ்,
பிளாட் எண்.25, 5/751 A, சபரி சாலை,
மடிப்பாக்கம், சென்னை – 600 091. ………மேல்முறையீட்டாளர்
(திரு. ஆர்.கனகராஜ் மற்றும்
திரு S. நீலகண்டபிள்ளை)

எதிர்

1. செயற்பொறியாளர் /இ&ப/கிண்டி,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு-1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV துணை மின்நிலைய வளாகம்,
கே.கே. நகர், சென்னை – 78.

2. உதவி செயற்பொறியாளர் /நங்கநல்லூர்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு-1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11KV நங்கநல்லூர் துணை மின்நிலைய வளாகம்,
100 feet ரோடு, நங்கநல்லூர், சென்னை – 600 061.

3. உதவி மின்பொறியாளர் /மூவரசம்பேட்டை,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு-1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11KV மடிப்பாக்கம் துணை மின்நிலைய வளாகம்,
மடிப்பாக்கம் பேருந்து நிலையம் அருகில்,
மடிப்பாக்கம், சென்னை – 600 091.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு P. நரேஷ் பாபு, செயற்பொறியாளர் /இ&ப/கிண்டி
திரு D. கோவிந்தராஜன், உதவி செயற்பொறியாளர் /நங்கநல்லூர்
திரு N.B. வெங்கடேசன், உதவி மின்பொறியாளர் /மூவரசம்பேட்டை)

**மனு பெறப்பட்ட நாள்: 26-06-2023**

**கேட்புரை நாள்: 28-08-2023**

**ஆணை நாள்: 11-09-2023**

26.06.2023 அன்று பெறப்பட்ட திரு. ஆர். கனகராஜ், பிளாட் எண்.25, 5/751 A, சபரி சாலை, மடிப்பாக்கம், சென்னை – 600 091 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 48/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 28.08.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

தனது மின் இணைப்பு எண் 09–264–672–1329–இல் வசூலிக்கப்பட்ட நிலுவைத் தொகையை திருப்பி தருமாறும், தனக்கு ஏற்பட்ட மனஉளைச்சலுக்கு இழப்பீடு தொகை வழங்குமாறும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 மின் இணைப்பு எண் 09–264–672–1329–இல் செலுத்திய நிலுவைத் தொகையை திரும்ப வழங்கக் கோரி மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.2 மனுதாரரின் கோரிக்கைக்கு உதவி செயற்பொறியாளர்/இ&ப/நங்கநல்லூர் கள ஆய்வு மேற்கொண்டு மனுதாரருக்கு தக்க விளக்கம் அளிக்கப்பட்டதாகவும் அதன் பிறகு மனுதாரர் நிலுவைத் தொகை செலுத்தி விட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 தான் செலுத்திய தொகையை திரும்ப வழங்குமாறும் தனக்கு ஏற்பட்ட மனஉளைச்சலுக்கு இழப்பீடு வேண்டியும் மேல்முறையீட்டாளர் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 23.02.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1 30.05.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம்

அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1, மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 30.05.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
>
> *மேற்கண்ட மன்றத்தின் கண்டுபிடிப்புகளின் படி மனுதாரர் மின் இணைப்பு எண்.264-672-1329 கொரோனா காலக்கட்டத்தில் மின் கட்டணம் செலுத்தாததால் மின் துண்டிப்பு செய்யாததற்கு கொரோனா காலக்கட்டத்தில் மின் கட்டண செலுத்தாத மின் இணைப்புகளை மின் துண்டிப்பு செய்ய வேண்டாம் என்ற தலைமை அலுவலகம் அறிவுறுத்தல் இருந்தது. தலைமை நிதிகட்டுப்பாட்டு அலுவலர் வருவாய் அவர்கள் Lr.No.CFC / REV FC REV/AO/REV/F.HT/D.No.831/21. Dt.16.12.2021, வழியே உறுதி செய்யப்படுகிறது.*
>
> *மேலும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் Supply Code (14) due dates and notifice periods. விதி எண் (5) இன் படியும் நிலுவையில் உள்ள மின் கட்டணத்திற்கு மனுதாரரே பொறுப்பாவார்.*
>
> *ஆதலால் மின் இணைப்பு எண். 264-672-1329 நிலுவையில் உள்ள மின் கட்டணத்திற்கு மின் இணைப்பு எண். 264-672-1329 உரிமையாளரே பொறுப்பேற்க வேண்டும் என்று இம்மன்றல் கருதுகிறது. மேலும் கோரியுள்ள நஷ்ட ஈடும் வழங்க தேவையில்லை.*
>
> *தவறான மின் கட்டணம் குறித்த மனுதாரரின் குறையை நிவர்த்தி செய்ய மின் அளவியை ஆய்வு செய்ய மனுதாரர் ஒத்துழைக்கவில்லை என்று உதவி மின்பொறியாளர்/மூவரசம்பேட்டை அவர்கள் தெரிவித்துள்ளதால் அக்குறை குறித்து உத்தரவு பிறப்பிக்க ஏதும் இம்மன்றத்தால் இயலவில்லை.*
>
> *எனவே நிலுவையில் உள்ள மின் கட்டணத்தை செலுத்துமாறு மனுதாரரை இம்மன்றம் அறிவுறுத்துகிறது.*
>
> *இத்துடன் முடித்து வைக்கப்படுகிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 23.08.2023 அன்று திட்டமிடப்பட்ட கேட்புரை நிர்வாக வசதி காரணமாக தள்ளி வைக்கப்பட்டு, 28.08.2023 அன்று நேரில் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு. ஆர்.கனகராஜ் மற்றும் அவர் சார்பாக திரு S. நீலகண்டபிள்ளை ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதத்தை எடுத்துரைத்தனர்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு P. நரேஷ் பாபு, செயற்பொறியாளர் /இ&ப/கிண்டி, திரு D. கோவிந்தராஜன், உதவி செயற்பொறியாளர்/நங்கநல்லூர் மற்றும் திரு N.B. வெங்கடேசன், உதவி மின்பொறியாளர் /மூவரசம்பேட்டை, சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு-1 ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதத்தை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் பெயரில் இருக்கும் Tariff V மின் இணைப்பு எண் 09-264-672-1329, 29.01.2021 ல் இருந்து 17.12.2021 வரைக்கும் வாடகைதாரர் உபயோகப்படுத்திய மின்சாரத்திற்கு மின் கட்டணம் செலுத்தாமல், மின் இணைப்பை மின் துண்டிப்பு செய்யாமல் மேலும் மேலும் மின்சாரத்தை சட்டத்திற்கு புறம்பாக பயன்படுத்த வாடகைதாரர் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும், மின்சார சட்டப்படியும் மின் துண்டிப்பு செய்யவில்லை எனவும், மின் துண்டிப்பு செய்யச்சொல்லி தான் அறிவுறுத்தியும் மின் துண்டிப்பு செய்யாமல் வாடகைதாரர் பயன்படுத்திய மின்சாரத்திற்கு தான் ரூபாய் 3,34,246/- நிலுவைத்தொகை செலுத்த வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 தன்னுடைய தவறு எதுவும் இல்லை என்பதால் மின்வாரிய கணக்கீட்டுப் பணியில் இருக்கும் அனைத்து அதிகாரிகளும் தான் இந்த முறைகேட்டிற்கு முழு பொறுப்பு ஆவார்கள் என்பதற்கு சந்தேகத்திற்கு இடம் இன்றி நிரூபிக்கப்படுவதால் இந்த மின் இணைப்பு சம்பந்தமான அனைத்து நிலவைத் தொகையையும் தவறு இழைத்த அதிகாரிகளிடமிருந்து நிர்வாகம் பெற்றுக் கொள்ள வழிவகை செய்து 29.01.2021 இருந்து 17.12.2021 வரைக்கும் உள்ள காலகட்டத்திற்கு ஏற்பட்ட மின்கட்டண பாக்கிக்கு தன்னை பொறுப்பாக்குவதில் இருந்து விலக்கு அளித்து தன்னை அனைத்து நிலுவையில் இருந்தும் விடுவிக்க வேண்டும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 தவறு செய்த அதிகாரிகள் மீது துறை ரீதியிலான நடவடிக்கைகளை தாங்கள் மேற்கொள்கிறோம் என்று ஒப்புக்கு சொல்லி உபயோகப்படுத்திய மின்சாரத்திற்கு தான் தான் மின் கட்டணம் செலுத்த வேண்டும் என்று சொல்லாமல் நிர்வாகம் முழுப் பொறுப்பும் எடுத்து மின் துண்டிப்பு செய்யாமல் இருந்த 9 மாதத்திற்கான மின் கட்டணத்தை அதற்குரிய வட்டியை செலுத்த எந்த வகையிலும் தன் மீது நிர்பந்திக்க கூடாது என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மேலும் ஒட்டுமொத்த சுகாதார பாதுகாப்பு இல்லாத இந்த சூழலிலும் தனது வயதான காலத்திலும் தனக்கு அதிகாரிகளின் தவறான செயல்களினால் தேவையில்லாத மன உளைச்சல் மற்றும் மன அழுத்தத்தை கொடுத்து தன்னை நடைபிணமாய் ஆக்கியதற்கு தனக்கு நஷ்ட ஈடு தொகை ரூபாய் 50 ஆயிரம் வழங்கி தீர்ப்பு அளிக்குமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 அதிகாரபூர்வமாகத் தான் மின்கட்டணம் செலுத்தாத வணிக பயன்பாட்டில் இருக்கும் மின் இணைப்பை 11 மாதங்கள் தாங்கள் மின் துண்டிப்பு செய்யவில்லை என்று எதிர்தரப்பு சொல்கிறது அதன் அடிப்படையில்தான் குறைநீர் மன்றமும் முடிவு எடுத்துள்ளதாகவும், ஆனால் மின் துண்டிப்பு செய்ய வேண்டாம் என்பதற்கான மின்வாரிய உத்தரவுகளை வழங்கி நிரூபிக்க எதிர்தரப்பும் மன்றமும் தவறி விட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 முறையாக புகார் தெரிவித்து 26 நாட்கள் கடந்த பின்பு கேட்புரை நடத்தப்பட்டுள்ளதாகவும், அப்போதும் அந்த உத்தரவு நகலை மனுதாரருக்கு வழங்கவில்லை எனவும், தலைவர், குறைதீர் மன்றம் கேட்புரை நாளில் கேட்டும் அந்த உத்தரவை எதிர்தரப்பு வழங்க தயாராக இல்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 உத்தரவில் ஒரு கடிதத்தின் கடித எண் L.r.No. CFC/REV/FC/REV/ AO/REV/F.HT/D.No. 831 /21 DT. 16.12.2021 குறிப்பிட்டுள்ளதாகவும், அதன் அடிப்படையாகத்தான் தீர்வு முடிவு செய்ததாக உத்தரவில் உள்ளதாகவும், ஆனால் அந்த கடிதத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்கிற முக்கியமான வாக்கியம் உத்தரவில் பதிவாகவும் இல்லை எனவும், அந்த கடிதத்தின் நகல் மனுதாரருக்கு வழங்கப்படவும் இல்லை எனவும் அந்த கடிதத்தில் எந்த நாளில் இருந்து வணிக மின் இணைப்பை மின் கட்டணம் செலுத்தாவிட்டாலும் பரவாயில்லை எனவும், மின் இணைப்பு உரிமைதாரர் மின் துண்டிப்பு செய்ய சொல்லி கேட்டாலும் பரவாயில்லை மின் துண்டிப்பு செய்ய வேண்டாம் என்று வாசகம் இருக்கிறதா என்று மனுதாரருக்கு தெரிவிக்கவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 Lr No. CFC/REV/FC/REV/AO/REV F.HT/D. No. 831/21 DT 16.12.2021 இந்த கடிதம் நுகர்வோர் தெரிந்து கொள்ளும் வகையில் வெளிப்படைத்தன்மையுடன் மின்வாரிய வெப்சைட்டில் பதிவிடவும் இல்லை எனவும், மேற்படி கடிதம் தவறு செய்யும் அதிகாரிகளை எச்சரிக்கை செய்து அனைத்து மின் இணைப்புகளையும் மின் கட்டணம் செலுத்தவில்லை என்றால் மின் துண்டிப்பு செய்யச் சொல்லும் எச்சரிக்கை கடிதம் என்று நம்ப இடமிருக்கிறது எனவும், எனவே இந்த கடிதத்தை காரணமாக வைத்து அதனால் தான் 1/2021 ல் இருந்து மின் துண்டிப்பு செய்யவில்லை என்று குற்றத்தை நியாயப்படுத்துவது சரி இல்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 ஒருவேளை மின்வாரியம் அப்படி ஒரு உத்தரவு வழங்கி இருந்தாலும் அது பொதுவான ஒரு உத்தரவு என்று மட்டுமே கருத வேண்டும் எனவும், அதாவது அந்த கால சூழலில் மின் கட்டணம் செலுத்தாமல் இருந்தாலும் மின் இணைப்பை துண்டிப்பு செய்வதால் நுகர்வோருக்கு ஏற்படும் அசௌகரியங்களை கணக்கில் கொண்டு அப்படி

ஒரு பொதுவான உத்தரவை வழங்கியதாக வைத்துக்கொண்டாலும் சம்பந்தப்பட்ட நுகர்வோரே பல காரணங்களுக்காக அது பாதுகாப்பு கருதி கூட இருக்கலாம் எனவும், தனது மின் இணைப்பு துண்டிப்பு செய்யச் சொல்லி கேட்டும் மின் இணைப்பை துண்டிப்பு செய்ய மாட்டேன் என்று வழக்காடுவது நுகர்வோருக்கான உரிமையில் அத்துமீறல் செய்ததற்கு சமம் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 இப்படி சட்டம் வழங்கி இருக்கும் நுகர்வோர் உரிமையில் மின்வாரியம் அத்துமீறி செயல் பட்டதன் விளைவு தான் பயன்படுத்தாத மின்சாரத்திற்கு மின் இணைப்பு தன் பெயரில் இருந்த ஒரே காரணத்திற்கு ரூபாய் 3,34,246/– தண்டம் எனவும், வேறு ஒருவர் பெயரில் இருக்கும் மின் இணைப்பில் இருந்து வாடகைதாரர் அந்த மின்சாரத்தை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சட்டம் அனுமதிக்கும் அதன் அடிப்படையில் இடத்தை வாடகைக்கு கொடுத்து வாடகைதாரர் ஒழுங்காக மின்கட்டணம் செலுத்தாமல் இருந்து கொண்டு மின்வாரிய அதிகாரிகளை முறைகேடாக பயன்படுத்தி மின்வாரிய சட்டங்களுக்கு எதிராக செயல்பட்டு மின்கட்டணம் செலுத்தாத மின் இணைப்பை துண்டிப்பு செய்யாமல் மின்வாரிய அதிகாரிகள் செயல்பட்டது குற்றம் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.11 எனவே, பல சூழ்நிலைகளில் பொருத்தி வாழும் சமூக கட்டமைப்பில் அந்தந்த துறை சார்ந்த அதிகாரிகள் அவர்களுக்கான வழிகாட்டுதல்கள் நெறிமுறைப்படி கண்டிப்பாக செயல்பட்டால் மட்டும்தான் வெவ்வேறு சூழலில் பயணப்படும் பொது மக்கள் அதிகம் சிரமம் இல்லாமல் அநியாயமாக பாதிக்கப்பட மாட்டார்கள் எனவும், இந்த நிகழ்வில் மின் வாரிய அதிகாரிகள் மின்வாரிய சட்டப்படி மின்கட்டணம் செலுத்தாத மின் இணைப்பை அதற்குரிய காலக்கெடுவில் மின் துண்டிப்பு செய்திருந்தால் யாரோ பயன்படுத்திய மின்சாரத்திற்கு மின் இணைப்பின் உரிமைதாரர் தண்டம் அழ வேண்டிய நிர்பந்தம் இருந்திருக்காது எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.12 கொரோனா காலம் என்று சொல்லப்பட்ட காலத்தில் மின் துண்டிப்பு செய்ய முடியவில்லையாம் ஆனால் முறையாக ஒவ்வொரு மின் கணக்கீட்டு பணியும் தவறாமல் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், தான் பலமுறை மின் துண்டிப்பு செய்ய வலியுறுத்த மின்வாரிய பிரிவு அலுவலகத்திற்கு சென்றிருக்கிறேன். மின் உபயோகம் பதிவு

செய்ததில் தவறு நடந்ததற்கான ஆதாரம் இருக்கிறது என்று சொல்லி மின் பளு அதிக demand பதிவானதற்கும் அந்த குறிப்பிட்ட 60 நாளைக்கு (9/2021) யின் பயன்பாடு அளவு 12140 units பதிவு செய்ததற்கும் நியாயம் இல்லை என்பதை சுட்டிக்காட்டி இருந்தேன் அதற்கு மன்றம் தனது தீர்ப்பில் மின் அளவியை ஆய்வு செய்ய மனுதாரர் ஒத்துழைக்கவில்லை என்று AE தெரிவித்ததாக சொல்லி மன்றம் மனுதாரருக்கு தீர்வு வழங்கவில்லை எனவும், ஆனால், உண்மையில் நடந்தது, கேங்மேன் என்று சொல்லி ஒரு நபர் வந்து மின் துண்டிக்கப்பட்ட மின் இணைப்பில் உள்ள மின் அளவியை கழற்றி செல்ல வந்திருக்கிறேன் என்று கூறியதாகவும், தான் அதற்கு இதுபோலத்தான் பத்து நாளைக்கு முன் கேங் மேன் என்று சொல்லி ஒரு நபர் வந்து மின் அளவி செயல்படுகிறதா என்று பார்வையிட வந்ததாக சொல்லி மின் துண்டிப்பில் இருந்த மின் இணைப்பில் மின்சாரம் கொடுத்து மின் அளவியை பார்த்துவிட்டு சென்றார் என தெரிவித்ததாகவும், நீங்கள் எதற்காக மின் அளவியை கழற்றுகிறீர்கள் எப்போது திரும்பவும் பொறுத்துவீர்கள் என்று குறிப்பு ஏதாவது ஒரு வடிவத்தில் அது கடிதமாகவோ அல்லது SMS மூலமாகவோ எனக்கு தெரிவித்து விட்டு தாராளமாக மின் அளவியை சுழற்றி செல்லுங்கள் என்று கேட்ட போது, அவரும் அதை ஏற்று தான் அதிகாரியிடம் சொல்லி அனுப்பசொல்கிறேன் என்று சொல்லி சென்றதாகவும், ஆனால் இதுவரை மீட்டர் கழற்றவில்லை இந்த விஷயத்தில் மன்றம் தன்னிடம் வாக்குமூலம் பெறாமல் ஒருதலை பட்சமாக தன் மீது பழிசுமத்தி விட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.13 எனவே மேலே சொன்ன நியாயங்கள் அடிப்படையில் தான் உபயோகப்படுத்தாத மின்சாரத்திற்கு தன்னை தண்டம் செலுத்த சொல்வது சரியில்லை எனவும், மின்வாரியத்தின் தவறு காரணமாகத்தான் தன் மீது இந்த நிதி இழப்பு சுமத்தப்பட்டுள்ளதாகவும், இது ஏதோ வீட்டு உரிமைதாரர் மற்றும் வாடகைதாரர் சம்பந்தப்பட்ட வழக்கு இல்லை எனவும், மின்வாரிய விதிகளின் படி மின்வாரியம் நடந்து கொள்ளாததின் விளைவுதான் இந்த நிதி இழப்பு, எனவே அதற்கு மின்வாரிய அதிகாரிகள்தான் நிதி இழப்பை சரிக்கட்டவேண்டும் எனவும், மன்றத்தில் முறையிட்ட கோரிக்கைக்கு மட்டும்தான் இந்த மேல்முறையீட்டு அமைப்பு தீர்வு வழங்கும் என்பதால் CGRF ல் முறையிட்ட தனது கோரிக்கையை ஏற்று அதையொட்டிய சரியான நியாயமான

பொருளாதார இழப்பிற்கான சுமையை தன்மீது சுமத்துவதில் இருந்து விலக்கு அளித்தும், இதுவரை தனக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு இழப்பீடு தொகை ரூபாய் 50,000/- வழங்க வேண்டும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 திரு.ஆர்.கனகராஜ், பிளாட் எண்.25, 5/751, சபரி சாலை, மடிப்பாக்கம், சென்னை-600091 என்ற பெயரில் மின் இணைப்பு எண்.264-672-1329-ல் 13KW வணிக உபயோகத்திற்கு கடந்த 01.10.2004 அன்று முதல் உபயோக பயன்பாட்டில் உள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேல்முறையீட்டாளர் திரு.ஆர்.கனகராஜ் அவர்கள் 02.04.2023 அன்று CGRF No.99 மூலம் பெறப்பட்ட புகாரில், *"மின்இணைப்பு எண்.264-672-1329-ல் tariff-V என் பெயரில் இருக்கிறது. நான் அந்த இடத்தின் உரிமையாளர். ஆனால், அந்த மின் இணைப்பிற்குண்டான இடம் வாடகைக்கு விடப்பட்டிருப்பதால் வாடகைதாரர் தான் அந்த மின்சாரத்தை உபயோகப்படுத்துபவராக இருந்து வந்திருக்கிறார். அவர் பயன்படுத்தும் மின்சாரத்திற்கு அவர் நேரடியாக மின் வாரியத்தில் பணம் செலுத்தி வந்திருக்கிறார் ஆனால் அவர் ஒரு நேர்மையான வாடகைதாரர் இல்லை. வாடகை பணம் கொடுப்பதில் இருந்து அனைத்து நடவடிக்கைகளிலும் ஒரு நேர்மையற்ற முறைகேடான ஒரு செயல்களை செய்து வந்திருக்கிறார் என்பது எனக்கு தெரிய வந்தது. அந்த வகையில் அவர் மீது தனியாக 2022-ல் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது.*

*மார்ச் 2021-ல் கணக்கீடு செய்த மின்சாரத்திற்கு மின் கட்டணம் செலுத்தாமல் இருக்கும் மின் இணைப்பை மின் துண்டிப்பும் செய்யாமல் 11 மாதங்களாக அதாவது வாடகைதாரர் காணாமல் ஓடும் நாள் 17.12.2021 வரை தொடர்ந்து மின் உபயோகத்தை சட்டத்திற்கு புறம்பாக அனுமதித்து அதனால் சுமார் ரூ.3,00,000/-மின்கட்டணத்திற்கான தொகை நிலுவையில் இருப்பதாக சொல்லி அந்த பணத்தை நான் தான் கட்ட வேண்டும் என்று சொல்வது நியாயமில்லை. மின் கட்டணம் செலுத்தவில்லை என்று சொன்னால் அதற்குரிய காலக்கெடு முடிந்தவுடன் மின்துண்டிப்பு செய்யவேண்டும்.*

*மின் கட்டணம் செலுத்தாமல் அத்துமீறி மின்சாரம் உபயோகம் செய்வதை சட்டப்படியும்; தடுத்து நிறுத்த சொல்லியும் மின் இணைப்பை துண்டிக்காமல் இருந்து அதனால் அனைத்து மின் நிலுவை தொகையையும் என்னை செலுத்த சொல்லும் உத்தரவு சம்பந்தமாக தீர்வு வேண்டி- என புகார் அளித்துள்ளார்"* என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 உதவி செயற்பொறியாளர் /இ&u /நங்கநல்லூர் கள ஆய்வு மேற்கொண்டதில், மனுதாரர் கோரிக்கைக்கான தக்க விளக்கம் அளிக்கப்பட்டதாகவும், பிறகு கட்டிட உரிமையாளர் நிலுவைத் தொகை ரூ.3,34,246/- முழுவதும் 08.06.2023 அன்று

செலுத்திவிட்டதாகவும், அன்றைய தினமே மறு மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேலும் மனுதாரரின் விருப்பத்திற்கிணங்க மின் அளவியை MRT சோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டு MRT சோதனை அறிக்கையில் பதிவு செய்யப்பட்ட கணக்கீடுகள் சரியாக உள்ளதாகவும், மின் அளவியும் நல்ல நிலையில் உள்ளது என்று அறிக்கை பெறப்பட்டுள்ளதாகவும், மேலும் கணக்கீடு பதிவு செய்யப்பட்டு நிலுவை தொகை வசூல் செய்யப்பட்டதாகவும், அனைத்தும் மின்வாரிய விதிகளின் அடிப்படையில்தான் செயல்படுத்தப்பட்டதாகவும், மின் கட்டணம் செலுத்துவதில் வாடகைதாருக்கும் வீட்டின் உரிமையாளருக்கும் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக நிலுவைத்தொகை செலுத்தப்படாமல் இருந்துள்ளதாகவும், மின் வாரியத்திற்கும் கட்டிட உரிமையாளருக்கும் இடையே மட்டும்தான் ஒப்பத்தம் உள்ளதே தவிர வாடகைதாரிடம் வசூல் செய்ய எந்த சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க அதிகாரம் இல்லை எனவும், வேறு எவ்வித அபராத தொகை ஏதும் வழங்க இயலாது எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.0 **<u>எதிர்மனுதாரரின் பதிலுரைக்கு மேல்முறையீட்டாளரின் மறுப்புரை:</u>**

7.1 கொரோனா காலத்தில் மின்கட்டணம் செலுத்தாமல் இருக்கும் மின் இணைப்புகளை 12 மாதங்களுக்கு மேலாக மின் துண்டிப்பு செய்ய வேண்டாம் என்று நிர்வாகம் சொன்னதாக சொல்லும் respondent அதற்குரிய உத்தரவு நகலை இது வரை வழங்கவில்லை தான் வலியுறுத்தி கேட்டும் வழங்க சொல்லி தலைவர், CGRF ம் உத்தரவிடவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.2 தலைமை நிதி கட்டுப்பாட்டு அலுவலர், வருவாய் அவர்கள் கடிதம் No CFC /REV/FC/RE AD/REV/EHT D.83121 DT. 16.12.2021 ஒன்று மேற்கோள் காட்டப்படுகிறது ஆனால் அந்தக் கடிதத்தின் நகலையும் இன்றுவரை வெளியிடவில்லை இந்த எதிர் மனுவிலும் இணைக்கப்படவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு உத்தரவுகளும் CGRF விசாரணையில் எதிர்மனுதாரால் வழங்கப்படவும் இல்லை அதில் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்ற வாசகம் தலைவர் CGRF அவர்களால் படித்துப் பார்க்காமலே அதில் என்ன

எழுதியிருக்கிறது என்பதை தெரிந்து கொள்ளாமலேயே, மனுதாரருக்கு தெரிவிக்காமலேயே தீர்ப்பு எழுதப்பட்டிருக்கிறது அபத்தம் எனவும், மேலே குறிப்பிட்ட இரண்டு உத்தரவுகளும் இந்த வழக்குக்கு எந்த வகையில் பொருத்தமானது என்ற விபரம் இன்று வரை தெரிவிக்கப்படவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 Supply code 14 விதி எண் 5 ன் படி நிலுவையில் உள்ள மின் கட்டணத்திற்கு மனுதாரரே என்று எதிர்மனுதாரர் உறுதிபட சொல்கிறார், நல்லது அப்படி என்றால். அந்த மின் இணைப்பு சம்பந்தமாக முடிவெடுப்பது என்பது அந்த மின் இணைப்பின் உரிமையாளருக்கு (மனுதாரருக்கு)தான் உண்டு எனவும், அதன் அடிப்படையில் மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மின் கட்டண தொகையை செலுத்தாமல் மின் உபயோகம் நடந்து கொண்டிருக்கிறது இதில் எனக்கு உடன்பாடு இல்லை எனவே மின்கட்டணம் செலுத்தாத இந்த மின் இணைப்பை மின் துண்டிப்பு செய்து விடுங்கள் என்று மின் இணைப்பின் உரிமையாளர் கேட்டுக்கொண்ட பின்பும் நிர்வாகம் மின் துண்டிப்பு செய்யவில்லை எனவும், அப்படி என்றால் மின் இணைப்பின் உரிமையாளருக்குரிய சட்டப்படியான உரிமையை நிர்வாகம் வழங்க மறுத்துவிட்டது எப்போது மின் இணைப்பின் உரிமையாளருக்கு அவர் பெயரில் இருக்கும் மின் இணைப்பில் உரிமை இல்லையோ மேற்படி மின் இணைப்பில் நிர்வாகத்தால் மேற்கொண்ட அத்துமீறிய உரிமையால் ஏற்பட்ட நிலுவைத் தொகைக்கு நிர்வாகம் தான் பொறுப்பு ஏற்க வேண்டும். எப்போது மின் இணைப்பின் உரிமையாளருக்கு அந்த மின் இணைப்பில் உரிமை இருக்கிறதோ அப்போதுதான் மேற்படி சட்டவிதி உரிமையாளருக்கு பொருந்தும் எனவே உரிமையாளரின் உரிமையை அத்து மீறி நிர்வாகம் எடுத்துக் கொண்டபடியால் நிலுவைத் தொகையை நிர்வாகம் தான் செலுத்த வேண்டும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.5 மின் அளவியை ஆய்வு செய்ய மனுதாரர் ஒத்துழைக்கவில்லை என்ற வாதம் தவறானது, ஒரு வாதத்தின் அடிப்படையில் இந்த தீர்ப்பு எழுதப்பட்டிருக்கிறது எனவும், மனுதாரரின் இடத்தில் பொருத்தப்பட்டுள்ள மீட்டரை கழட்டி எடுத்துச் செல்ல முயலும் போது மனுதாரருக்கு எழுத்துப் பூர்வமான ஒரு அறிவிப்பு செய்திருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டதாகவும், ஏனென்றால், மேற்படி பணிக்கு வந்த நபர் மின்வாரிய ஊழியர்

தானா என்று அறிந்து கொள்ள எந்தவித அடையாளமும் அவரிடம் இல்லை மேலும் அவருடைய செயல்பாடு தொழில்நுட்ப ரீதியிலும் சட்டப்படியும் ஏற்புடையது இல்லை ஏனென்றால் மின் துண்டிப்பு செய்த மின் இணைப்பில் அவராகவே மின் இணைப்பை கொடுத்து மின்னளவி செயல்படுகிறதா என்று ஆய்வு செய்கிறார் அதுவே ஒரு தவறான முன்னுதாரணம் ஒருவேளை அந்த நபர் மின் இணைப்பு செய்த நிலையிலேயே மறுபடியும் மின்துண்டிப்பு செய்யாமல் விட்டு விட்டு சென்றிருந்தால் மனுதாரர் தான் திருட்டுத்தனமாக மின்சாரத்தை உபயோகப்படுத்தி இருக்கிறார் என்று மின்சார வாரியம் வாதம் செய்ய ஏதுவாக இருந்திருக்கும் எனவும், எடுத்துச் செல்வதற்கு முன் எழுத்து பூர்வமாக மனுதாரருக்கு தகவல் தெரிவித்து விட்டு கழட்டிச் செல்லுங்கள் என்று அறிவுறுத்தப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.6 நிலுவைத் தொகை செலுத்தியது, மறு மின் இணைப்பு வழங்கியது என்பது இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லாத விஷயம் தேவையில்லாத தகவலை Ombudsman ஐ குழப்புவதற்காக இங்கே பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. இந்த தகவல் பொய்யான தகவல் வழங்கியுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.7 மனுதாரரின் விருப்பத்திற்கிணங்க மின் அளவியை சோதனை செய்ததில் பதிவு செய்யப்பட்ட கணக்கீடுகள் சரியாக உள்ளது என்று மேற்படி கவுண்டர் அப்பிடவிட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், மனுதாரரின் விருப்பத்திற்கு இணங்க என்று சொல்லும் போது சோதனை செய்த விவரம் அதன் அறிக்கை நகல் மனுதாரருக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும் இன்று வரை வழங்கப்படவில்லை எனவும், குறைந்தபட்சம் Ombudsman காவது வழங்கி இருக்க வேண்டும் வழங்கி இருப்பதாக தகவல் இல்லை எனவும், இந்த கவுண்டர் affidavit லும் இணைக்கப்படவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.8 நிலுவைத் தொகை செலுத்தப்படாமல் இருந்ததற்கு எதிர்மனுதாரர் அவராகவே ஒரு கற்பனை வாதத்தை முன் வைத்திருக்கிறார் இது அவருக்கு சம்பந்தமில்லாத விஷயம் அப்படி சொல்வதற்கு அவரிடம் இருக்கும் ஆவணத்தின் நகல்களை குறைந்தபட்சம் இணைத்திருக்க வேண்டும். எந்தவித சாட்சிகளும் இல்லாமல் ஆவணங்களும் இல்லாமல் மனுதாரரை குற்றம் சுமத்துவது என்பது ஏற்புடையது

இல்லை நான் என்னுடைய மனுவிலேயே இந்தப் பிரச்சனை வீட்டு உரிமையாளர் மற்றும் வாடகைதாரர் சம்பந்தமான பிரச்சினை இல்லை என்று தெளிவாக குறிப்பிட்டு இருக்கிறேன். வாடகைதாரரை காலி செய்ய வேண்டும் என்பதற்காக மின்வாரியத்தின் உதவியை நாடவில்லை என்பதையும் தெளிவாக குறிப்பிட்டு இருக்கிறேன் அப்படி சொல்லியும் வேண்டுமென்றே திசை திருப்புவதற்காக ஒரு பொய்யான அவருக்கு சம்பந்தமில்லாக ஒரு கருத்தை இந்த வழக்கில் கொண்டு வந்து சேர்ப்பது என்பது கிரிமினல் குற்றம் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.9 எனவே எதிர்தரப்பின் வாதத்தை ஏற்றுக்கொள்வதற்கான எந்த சாத்தியக்கூறுகளும் இல்லை என்பதால் நான் மேற்குறிப்பிட்டுள்ள ஆவணங்களின் நகல்களை மீட்டர் பரிசோதனை செய்த அறிக்கை அனைத்தையும் எனக்கு வழங்க உத்தரவிட வேண்டும் என்று Ombudsman ஐ கேட்டுக்கொள்கிறேன் அதே நேரத்தில் என் டைய மனுவில் சொல்லப்பட்டிருக்கும் நியாயங்களின் அடிப்படையில் தான் கேட்டுக்கொண்ட தீர்வை தனக்கு வழங்கிடவும் வேண்டுமென மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

## 8.0 <u>மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்த மறுப்புரைக்கு எதிர்மனுதாரரின் எழுத்துபூர்வமான வாதங்கள்</u> :

8.1 கொரோனா காலத்தில் 3/2020 முதல் பொதுமக்களின் உயிர்நலன் காத்திடவும் தனிமைப்படுத்திக் கொள்ளவும் அரசு உத்தரவிட்டதின்பேரில் மின்இணைப்பு துண்டிப்பு செய்வதை வீடுகளுக்கு நேரடியாக சென்று துண்டிப்பு செய்வதை தவிர்க்கப்படும் வாய்மொழி உத்தரவு மேலதிகாரிகளிடம் இருந்து பெறப்பட்டதின் அடிப்படையில் மின்வாரிய ஊழியர்களின் உயிரை பாதுகாக்க மூவரசம்பேட்டை மற்றும் மடிப்பாக்கம் பகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் நேரடி மின்துண்டிப்பு தவிர்க்கப்பட்டு வந்ததாகவும், மூவரசம்பேட்டை பிரிவு அலுவலகத்திற்குட்பட்ட எந்த மின்இணைப்பு கணக்கீடு செய்யவில்லை எனவும், எனவே தங்கள் குறிப்பிடும் மின்இணைப்பு மின் கணக்கீடு செய்ய இயலவில்லை எனவும், எனினும் Lr.No.CFC/REV/ FC/REV/AO/ REV/F.HT/ D.No.831/21, dt.16.12.2021 வாரிய உத்தரவிற்கு பிறகு உரிய நடவடிக்கை மேற்கொண்டு

மின்துண்டிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

8.2 Supply Code 14–ல் கூறியுள்ளபடி மற்றும் மின்இணைப்பின் உரிமையாளரே மொத்த மின்கட்டண தொகையையும் செலுத்துவதற்கு பொறுப்பானவர் ஆவார். மேலும் 264–672–1329 மின்இணைப்பின் உரிமையாளர் மின் இணைப்பை துண்டிப்பதற்காக எந்த கடிதமும் அப்போதைய உதவிபொறியாளர்/இ&ப மூவரசம்பேட்டையிடமோ (அ) CGRF மன்றத்திலோ அளிக்கவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

8.3 மின்வாரிய ஊழியர்கள் மின்அளவியை அகற்ற வரும்போது அந்த விலாசத்தில் பொறுத்தப்பட்டிருந்த மின்அளவியை அகற்ற இயலவில்லை எனவும், ஏனெனில் அதன் உட்புறம் மற்றும் வெளிப்புறம் பூட்டு போடப்பட்டிருந்ததாகவும், எனவே மின் அளவியை அகற்ற சென்ற மின்ஊழியர் அலுவலகம் திரும்பி வந்துவிட்டதாகவும், எனவே மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் எவ்வித கடிதமும் வழங்க இயலவில்லை எனவும், மனுதாரர் நிலுவைத்தொகையான ரூ.3,34,246/–ஐ கடந்த 08.06.2023 செலுத்தியதின்பேரில் மறு மின்இணைப்பு வழங்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

8.4 மனுதாரர் விருப்பத்திற்கிணங்க மின் அளவியை சோதனை செய்யப்பட்ட மின்அளவியின் MRT சோதனை அறிக்கையின் நகல் தற்போது சமர்ப்பிக்கப்படுவதாகவும், மனுதாரர் 08.06.2023 அவருடைய நிலுவைத் தொகையான ரூ.3,34,246/–ஐ மீண்டும் செலுத்தியதின்பேரில் அவருடைய மின்இணைப்பு மீண்டும் மறு மின் இணைப்பு செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

8.5 எனவே Honourable Ombudsman அவர்கள் CGRF–ன் இறுதி ஆணைப்படியே அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது என்பதை ஏற்று மனுதாரரின் அனைத்து கோரிக்கைகளையும் நிராகரித்து அவருடைய கோரிக்கையை தள்ளுபடி செய்யுமாறு எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**9.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

9.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

9.2 மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின் இணைப்பு எண் 264-672-1329 - விகிதபட்டி V-இல் உள்ள இணைப்பு வாடகைக்கு விடப்பட்ட நிலையில், 3/2021 ல் கணக்கீடு செய்து பணம் செலுத்தாத நிலையிலும் மின் இணைப்பை மின் துண்டிப்பு செய்யாமல் வாடகைதாரர் 17.12.2021 வரை தொடர்ந்து பயன்படுத்த அனுமதித்தும் அந்த வாடகைதாரர் தான் அந்த மின்சாரத்தை உபயோகப்படுத்தியதாக தெரிவித்துள்ளார். அவர்தான் அந்த மின்பயன்பாட்டிற்கு மின்சார பணம் கட்டியநிலையில் மேலும் வாடகைதாரர் நேர்மையற்றவர் அவர்மீது வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் நிலையில் 3/2021-இல் கணக்கீடு செய்த மின்சாரத்திற்கு மின் கட்டணம் செலுத்தாமல் இருக்கும் மின் இணைப்பை 17.12.2021 வரை தொடர்ந்து அனுமதித்து அதற்காக தன்னிடம் ரூ.3,34,246/- நிலுவை தொகை செலுத்த வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்ட நிலையில் அதன்மீது வழங்கப்பட்ட மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் ஆணை சரியாக பரிசீலிக்கப்படவில்லை என்பதால் மேல்முறையீடு செய்ததாக தெரிவித்தார்.

9.3 மேலும் கொரோனா காலத்தில் மின்பதிவு செய்து வந்த நிலையில் மின் துண்டிப்பு செய்ய வேண்டாம் என்ற உரிமைதாரரின் வாய்மொழி உத்தரவு எதுவும் பொருந்தாது என்றும் மேலும் உரிமைதாரரின் கடித எண் Lr.No.CFC/ REV/FC/REV/AO/RV/F.HT/ D.No 831/21, dt.16.12.2021 மின்நுகர்வோர் அனைவருக்கும் தெரியவரும் நிலையில் உரிமதாரர் இணைய தளத்தில் இல்லை என்றும் அதில் எந்த மின் கணக்கீட்டு காலத்திலிருந்து மின் கட்டணம் செலுத்தாத நிலையில் இருந்தது என்பதும் குறிப்பிடப்படவில்லை என்றும் முறையிட்டார்.

9.4 மேலும், தான் மின் துண்டிப்பு செய்ய வலியுறுத்தியும் அம்மின் இணைப்பில் மின் கட்டணம் செலுத்தாத நிலையில் மின்னிணைப்பு துண்டிக்கவில்லை என முறையிட்டார். வாடகைதாரர் வேறு ஒருவர் பெயரில் இருக்கும் மின்சாரம் பயன்படுத்தி கொள்ள அனுமதிக்கும் சட்டம் வாடகைதாரர் மின்சாரத்தை பயன்படுத்திய நிலையில் மின்சாரத்திற்கான கட்டணம் செலுத்தா நிலையில் மின் வாரிய அதிகாரிகள் மின்வாரிய சட்டங்களுக்கு எதிராக செயல்பட்டு மின்கட்டணம் செலுத்தாத மின் இணைப்பை துண்டிப்பு செய்யாமல் விட்டது குற்றம் என வாதிட்டார். ஆகவே தனக்கு ஏற்பட்ட நிதி

இழப்பை உரிமதாரர் ஈடுசெய்ய வேண்டும் என்றும் மீண்டும் மனஉளச்சலுக்கு ரூ.50,000/- வழங்க உத்திரவிட வேண்டியும் முறையிட்டு வைத்துள்ளனர்.

9.5 மேற்கூறிய மேல்முறையீட்டாளரின் சாராம்சத்தின் மூலம் மேல்முறையீட்டாளரின் பெயரில் உள்ள மின் இணைப்பு இடம் வாடகைக்கு விடப்பட்டுள்ளதாகவும், அதில் மேல்முறையீட்டாளருக்கும் வாடகைதாரருக்கும் பிரச்சனை இருப்பதும் அதன் அடிப்படையில் அந்த காலகட்டத்தில் நீதிமன்ற வழக்கு இருப்பது தெரிய வருகின்றது. அதில் வாடகைதாரர் 17.12.2021 வரை அதாவது மின் துண்டிப்பு செய்த காலம் வரை 11 மாதங்கள் மின்சாரம் பயன்படுத்தியது தெரிய வருகின்றது.

9.6 மேல்முறையீட்டாளர் தன்னுடைய வாதுரையில் மின்சாரத்தை தான் மின் துண்டிப்பு செய்ய வலியுறுத்தியும் உரிமதாரர் மின் துண்டிப்பு செய்யாமல் மின்சாரத்தை சட்டத்திற்கு புறம்பாக 17.12.2021 வரை வாடகைதாரர் பயன்படுத்த அனுமதித்ததையும் அதற்காக தான் ரூ.3,34,246/- நிலுவை தொகை செலுத்தும் நிலைபாட்டுக்கு தள்ளப்பட்டேன் என்றும் இதற்கு தான் பொறுப்பல்ல என்றும் அதற்காக உரிமதாரர் அலுவலக அதிகாரிகள் தான் பொறுப்பாக வேண்டும் என்றும் மின் கட்டணம் கட்டிய நிலுவை தொகையிலிருந்து மேல்முறையீட்டாளரை விடுவித்தும் தனக்கு ஏற்பட்ட மனஉளச்சலுக்கு ரூ.50,000 வழங்குமாறு முறையீடு வைத்துள்ளார்.

9.7 எதிர்மனுதாரர் மின் இணைப்பு எண்.264-672-1329 திரு.ஆர்.கனகராஜ் என்பவர் பெயரில் 13 கி.வாட் வணிக உபயோகத்திற்கு கடந்த 01.10.2004 அன்று வழங்கப்பட்டதாக தெரிவித்தார். மேலும் கொரோனா காலக் கட்டத்தில் மின் கட்டணம் செலுத்தா மின் இணைப்புகளை மின் துண்டிப்பு செய்ய வேண்டாம் என்ற தலைமை அலுவலகம் அனுப்புதல் படியே நடந்ததாகவும், அதை இணைக்கப்பட்ட கடித எண் Lr.No.CFC/ REV/FC/REV/AO/RV/F.HT/ D.No 831/ 21, dt.16.12.2021 மூலம் உறுதி செய்வதாக வாதிட்டார்.

9.8 மேலும் கொரோனா காலத்தில் 03/2020 முதல் பொது மக்களின் உயிர் நலன் காத்திடவும் தனிமைப்படுத்தி கொள்ளவும் அரசு உத்தரவின்படி வீடுகளுக்கு நேரடியாக சென்று மின் துண்டிப்பு செய்வதை தவிர்க்க வாய்மொழி உத்தரவின் பேரில் மேல் அதிகாரிகளிடம் இருந்து பெறப்பட்டதின் அடிப்படையில் மின்வாரிய ஊழியர்களின்

உயிரை பாதுகாக்க மூவரசம் பேட்டை மற்றும் மடிப்பாக்கம் பகுதிக்குட்பட்ட பகுதிகளில் நேரடி மின் துண்டிப்பு தவிர்க்கப்பட்டு வந்தது எனவும், பிறகு தலைமை அலுவலகம் Lr.No.CFC/ REV/FC/REV/AO/RV/F.HT/ D.No 831/ 21, dt.16.12.2021 உத்தரவிற்கு பிறகு உரிய மின் துண்டிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

9.9 நிலுவையில் உள்ள மின் கட்டணத்திற்கு மின் இணைப்பு எண் 264–672–1329 உரிமையாளரே பொறுப்பேற்க வேண்டும் என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்தார். மனுதாரரின் கோரிக்கைக்கு தக்க விளக்கம் அளிக்கப்பட்டதாகவும் கட்டிட உரிமையாளர் நிலுவை தொகை ரூ.3,34,246/– முழுவதும் செலுத்திய நிலையில் 8/6/2023 அன்று மறுமின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார். மேலும், மின் கட்டணம் செலுத்துவதில் வாடகைதாரருக்கும் வீட்டின் உரிமைதாரருக்கும் ஏற்பட்ட பிரச்சனையில், நிலுவையில் உள்ள மின் கட்டணம் வசூலிக்க மின் வாரியத்திற்கும் கட்டிட உரிமையாளருக்கும் மட்டுமே ஒப்பந்தம் உள்ளதே தவிர வாடகைதாரரிடம் வசூல் செய்ய எந்த சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க அதிகாரம் இல்லை என்றும், மேலும் மேல்முறையீட்டாளர் மின் இணைப்பை துண்டிப்பதற்கான எந்த கடிதமும் வழங்கவில்லை என்றும், பயன்படுத்திய மின்சாரத்திற்கு கொரோனா காலத்தின் மின் துண்டிப்பு செய்ய கூடாது என்ற அறிவுரையில் செயல்பட்டு வந்ததால் மேல்முறையீட்டாளரின் அபராத தொகை வழங்க கோரும் கோரிக்கையை நிராகரிக்கவும் வாதிட்டுள்ளார்.

9.10 மேற்கூறிய வாத பிரதிவாதங்களிலிருந்து கீழே கண்டவாறு ஆராயப்பட்டு தீர்வு காணப்படுகின்றது.

மின் இணைப்பு எண் 264–672–1329 விகிதப்படி V–இன்படி திரு.கனகராஜ் என்பவர் பெரில் இருப்பது உறுதியாகின்றது. மேலும் கொரோனா காலத்தில் மின் இணைப்பு துண்டிப்பு செய்யப்படாத காலமான 1/2021 முதல் 17.12.2021 வரை மின் இணைப்பு பயன்பாட்டில் இருந்ததா, வாடகைதாரரின் கடை செயல்பட்டதா என்று வினவிய பொழுது மேல்முறையீட்டாளர் அக்காலகட்டத்தில் வாடகைதாரர் கடையை நடத்தி வந்ததாக ஒப்புக் கொண்டார். மேலும் தன்னுடைய முறையீட்டு மனுவிலும் கீழ்கண்டவாறு தெரிவிக்கிறார் "*எனது பெயரில் இருக்கும் Tariff V மின் இணைப்பு எண் 09–264–672–1329 29.01.2021 ல் இருந்து 17/12/21 வரை வாடகைதாரராக*

*உபயோகப்படுத்திய மின்சாரத்திற்கு மின் கட்டணம் செலுத்தாமல் மின் இணைப்பு மின் துண்டிப்பு செய்யாமல் மேலும் மின்சாரத்தை சட்டத்திற்கு புறம்பாக பயன்படுத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறார்"* என்ற வாக்குமூலத்தின் மூலம் மேற்கூறிய மின் இணைப்பில் மின் பயன்பாடு இருந்தது தெரிய வருகிறது.

9.11 அடுத்து மேல்முறையீட்டாளர் மின் நுகர்வோர் குறை தீர்மன்றத்தில் முறையீடு செய்யும் பொழுது கீழ்கண்டவாறு பதிவு செய்து உள்ளார்.

*"அவர் ஒரு நேர்மையான வாடகைதாரர் இல்லை. வாடகை பணம் கொடுப்பதில் இருந்து அனைத்து நடவடிக்கைகளும் ஒரு நேர்மையற்ற முறைகேடான ஒரு செயல்களாக செய்து வந்திருக்கிறார் என்பது எனக்கு தெரிய வந்தது. அந்த வகையில் அவர் மீது தனியாக 2022 ல் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது என்று தெரிவித்திருந்தார்".*

ஆனால் மின்குறைதீர்ப்பாளரிடம் மேல்முறையீட்டு செய்யும் பொழுது இது ஏதோ வீட்டு உரிமைதாரர் மற்றும் வாடகைதாரர் சம்பந்தப்பட்ட வழக்கு இல்லை என்று மறுத்து மின்வாரிய விதிகளின்படி நடந்து கொள்ளாததால் அவருக்கு நிதி இழப்பு என்று மாற்றி வாதிட்டு வருகின்றார்.

9.12 இந்நிலையில் மின் ஆற்றல் வழங்குவதற்கான கேட்புகளில் கூறப்பட்ட தமிழ்நாடு மின் பகிர்மான விதி 27(2)–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"27. மின் ஆற்றல் வழங்கலுக்கான கேட்புகள்***

*xxx*

*(2) தேவைப்படும் கோது, துணைப்பிரிவு (1) இல் குறிப்பிட்டுள்ள இருப்பிடத்துக்கு மின் வழங்கலைத் தருவதற்காக மின் எந்திரத் தொகுப்பையோ மின் தொடரையோ அமைப்பது ஒவ்வொரு உரிமதாரரின் கடமையாகும். எனினும், உரிய ஆணையம் தீர்மானித்த உரிய விலையை உரிமதாரருக்குச் செலுத்த இசைவு தந்தாலொழிய, ஏற்கனவே தனி மின் வழங்கல் பெற்றுள்ள இடத்துக்கு எவரும், மின்சாரம் வழங்கும்படி உரிமதாரரிடம் உரிமையோடு கேட்கலோ அல்லது அவரிடமிருந்து தொடர்ந்து மின்சாரம் பெற்றுக் கொண்டிருக்கவோ முடியாது."*

மேற்கூறிய விதிகளை ஆராயும்போது உரிய ஆணையம் தீர்மானித்த உரிய விலையை உரிமதாரருக்குச் செலுத்த வேண்டும் என்பது தெரிய வருகிறது.

9.13 மேலும் மின் இணைப்பு பெறும்போது மின் நுகர்வோர் கையொப்பமிட்டு அளிக்கும்

விண்ணப்பம் படிவம் 1-ன் பத்தி 2-ஐ ஆராய விரும்புகிறேன். அப்பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"படிவம் 1*
*(தற்காலிக மின்வழங்கல், வேளாண்மை மற்றும் குடிசை மின்னிமைப்பு தவிர)*
*தாழ்வழுத்த மின் இணைப்பு விண்ணப்பப் படிவம் (ஒருமுனை / மும்முனை) தாழ்வழுத்த மின்வழங்கல் கோரும் படிவம்*
*[விதித்தொகுப்புத் தொடர் 27 (3) பார்க்க]*

*xxx xxx xxx*

*2. நான்/நாங்கள் மேற்சொன்ன மின்னாற்றலுக்காக தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பு, மின் வழங்கல் விதித்தொகுப்பு, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இது தொடர்பாக வெளியிடும் அறிவிப்புகள், ஆணைகள் ஆகியவற்றின்படி விதிக்கப்படும் விலை வீதத்திற்கு இணங்கக் கோரப்படும் மின்னாற்றல், மின்னிணைப்புக் கட்டணங்கள், காப்பு வைப்புத் தொகை, மின்னளவி வாடகை, மேம்பாட்டுக் கட்டணங்கள் மற்றம் பிற கட்டணங்களைச் செலுத்துவதற்கு ஒப்புக் கொள்கிறேன்(றோம்)."*

மேற்கூறிய விதிகளின்படி ஒரு மின் இணைப்பு பெற்ற மின் நுகர்வோர் விதிக்கப்படும் விலை வீதத்திற்கு இணங்கக் கோரப்படும் மின்னாற்றல், மின்னிணைப்புக் கட்டணங்கள், காப்பு வைப்புத் தொகை, மின்னளவி வாடகை, மேம்பாட்டுக் கட்டணங்கள் மற்றம் பிற கட்டணங்களை உரிமதாரருக்கு செலுத்தக் கடமை பட்டுள்ளார். மேலும், மின்பகிர்மான விதி எண்.33-ன்படி விவசாய மற்றும் தொழிற்சாலை அல்லாத தாழ்வழுத்த மின்னிணைப்புகளை பொறுத்தவரை மின்னிணைப்பு கோரும் படிவமே இசைவு (Application-Cum-Agreement) பத்திரமாக கருதப்படவேண்டும் என்பதால், மின் நுகர்வோர் அந்த இசைவு பத்திரத்தின்படி உரிய மின் கட்டணம் செலுத்த வேண்டும். எனவே, மின் இணைப்பில் நிலுவையிலுள்ள கட்டணத்திற்கும் தனக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும் வாடகைதாரரிடம்தான் உரிமதாரர் மின் கட்டணம் வசூல் செய்யவேண்டும் என்று வாதிடுவது பொருத்தமற்ற வாதம். ஆகவே மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான வாடகைதாரரிடம் நிலுவையில் உள்ள கட்டணத்தை வசூலிக்கக் கோரும் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

9.14 அடுத்த கோரிக்கை தன்னுடைய நேர்மையற்ற வாடமைதாரர் பயன்பாட்டில் இருந்த மின் இணைப்பை துண்டிக்க தான் வற்புறுத்தியும் மின் இணைப்பு துண்டிக்கவில்லை என்ற முறையீட்டை ஆராய விரும்புகிறேன். மேல்முறையீட்டாளர்

தன்னுடைய வாதத்திலும் தன்னுடைய முறையீட்டு மனுவில் 21/01/21 முதல் 17/12/21 வரை அவருடைய மின் இணைப்பில் வாடகைதாரர் பயன்படுத்தியதை உறுதி செய்துள்ளார். மேலும் தான் மின் இணைப்பை துண்டிக்க மனு அளித்தாக கூறுவதற்கான ஆதாரங்கள் எதுவும் இணைக்கவில்லை. மேலும் ஒரு இடத்தில் வாடகைதாரர் மின்சாரம் பயன்படுத்தும் பொழுது மின்னிணைப்பு உள்ள சொத்தின் உரிமையாளர் அந்த மின்சாரத்தை துண்டிக்க மின் உரிமதாரரை வலியுறுத்த முடியுமா என ஆராய விரும்புகின்றேன்.

9.15 இது சம்பந்தமாக, ஒருவர் மின்னிணைப்பை உபயோகித்துவரும் நிலையில் ஒரு கட்டிடத்தின் அத்தியாவசியமான மின்சாரத்தை மின் துண்டிப்பு செய்ய போதுமான காரணங்களை ஆராய விரும்புகிறேன்.

**STATUTORY PROVISIONS FOR DISCONNECTION**

| Sl. No. | Provision | Reason |
|---|---|---|
| 1 | Section 56 of Electricity Act 2003 Regulation 21 of TNE Supply Code | Non payment of dues |
| **Court Directions** | | |
| 2 | Specific order of disconnection issued by the Court. | |

சம்பந்தப்பட்ட தமிழ்நாடு மின்வழுங்கல் விதி 21 (1) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"**21. மின்வழுங்கல் துண்டிப்பு** :*

*சட்டத்தின் 56 ஆவது சட்டப் பிரிவு, மின் கட்டணம் செலுத்தத் தவறிய மின் வழங்கல் துண்டிப்பு பற்றி பின்வருமாறு கூறுகிறது.*

*(1) அவருக்கு மின்சாரம் வழங்கல் அல்லது செலுத்துதல் அல்லது பகிர்தல் அல்லது சுமந்து செல்லல் (wheeling)தொடர்பாக உரிமதாரருக்கோ மின்னாக்கக் குழுமத்துக்கோ, தனியொருவர், மின்சாரக் கட்டணமாகவோ அல்லது அது தொடர்பான மின்சாரக் கட்டணமல்லாத வேறுபிற தொகையாகவோ அமைந்த நிறுவைகளைக் கட்டப் புறக்கணித்தால், உரிமதாரரோ அல்லது மின்னாக்கக் குழுமமோ (generating company) எழுத்து மூலமாகச் சரியான (clear) 15 நாட்களுக்கான எச்சரிக்கை அறிவிப்பு கொடுத்து விட்டு, அவருக்குரிய கட்டணத்தை அல்லது வேறு பிற தொகையை, வழக்கு மூலமும் மீட்பதற்குக் குந்தகமேதுமில்லாதபடி, மின்சார வழங்கலைத் துண்டிக்கலாம். மேலும்*

*அந்நோக்கங்கருதி மின்சாரம் வழங்கும் எந்த மின் தொடரையும் துண்டிக்கலாம் அல்லது கழற்றிவிடலாம். மின்சாரத்தை வழங்கிய, செலுத்திய பகிர்ந்த அல்லது சுமந்து சென்ற பணியமைப்புகள் உரிமதாரரின் அல்லது மின்னாக்கக் குழுமத்தின் சொத்தாகையால், மின் கட்டணத்தையோ அது சார்ந்த வேறுபிற கட்டணத்தையோ, உரியவர் மின் வழங்கல் துண்டித்தபிறகு மீளவிணைப்பதற்காகும் செலவினங்களையும் சேர்த்துக் கட்டும்வரை மின்னிணைப்பு துண்டிப்பு தொடரலாம். ஆனால் அதற்கு மேல்நீடிக்கக் கூடாது."*

9.16 மேற்கூறிய விதியின்படி பயன்படுத்திய மின் நுகர்வுக்கான மின் கட்டணம் செலுத்தாத நிலையில் மின் துண்டிப்பு செய்யலாம் என அறியப்படுகிறது. மேலும் நீதிமன்ற உத்தரவுக்கிணங்க மட்டுமே மின் துண்டிப்பு செய்யலாம் என்பதும் தெரிய வருகிறது.

9.17 மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தின் மின்சாரச் சட்டங்கள் மற்றும் தீர்ப்புகளில் உள்ள விதிகளின் அடிப்படையில் இதே போன்ற முந்தைய சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட குறிப்புகளைக் கருத்தில் கொண்டு கூறப்பட்ட சட்ட விதிகளை பரிசீலித்து, பல்வேறு முடிவுகளை வழங்கியுள்ளது, அவற்றில் சில கீழே கூறப்பட்டுள்ளன.

*"(i) In S.A.Ponnappan —vs- J.A. Bath urujaman and two others in W.A.No.1396 of 2007 dated 15.04.2009 (TNEB case) reported in 2009 (2) TNCJ 411 (Mad), the Division Bench of the Hon'ble High Court has held as follows :-*

*"10. The above provision makes it clear that an intending consumer, who is in lawful occupation, can apply to the Electricity Board, with the consent of the landlord, for supply of electricity. In case if the owner refused to give consent letter or he is not in station, the consumer shall produce a proof that he is in lawful occupation of the premises and also execute an indemnity bond in Form 6 of the Annexure Ill of this Code indemnifying the Electricity Board against any loss on account of disputes arising out of effecting service connection.*

*11. In such view of the matter, when there is a provision as enacted by the State Electricity Regulatory Commission in accordance with Section 86 of the Electricity Act, 2003 (Central Act 36 of 2003), certainly the lawful occupant has a right to have the electricity supply and if he is compelled to lead his life in darkness, it would amount to make him lead an animal life, which is not the purport of the Constitution. Therefore, we are of the view that the said Clause confers such valuable right to the occupant."*

*(ii) When a consumer for many years was directed to produce documents pursuant to a complaint alleging production of fabricated documents to get service connection, the Hon'ble High Court, Madras, in WP No.29586 of 2015 dated 21.09.2015, has held as follows :-*

*"5. It is very unfortunate to note that based on the complaint received from Seviappan which does not disclose any material evidence, the fifth respondent has issued notice to the petitioner to produce the relevant documents. In fact, the fifth respondent should have called upon the complainant to produce the relevant document with regard to his claim in respect of the said property. Assuming for a moment that even if there is a dispute, the respondent has got no jurisdictional power to decide about the issue and if it all, only the Civil Court can decide the issue. Moreover, the electricity service connection is not given recently but it was given about 15 years ago. When that is the position, the issuance of notices by the fifth respondent is unjustified, unwarranted and to be deprecated and it is accordingly, deprecated."*

(iii) In A.Nazeer Ahmed —vs- Assistant Engineer (North Division), TNEB, Vaniyambadi and another in W.P.No.1040 of 2013 dated 03.04.2013, it has been held as follows :-

*"3. Even assuming that an eviction order has been obtained by the second respondent against the petitioner, unless and until, the same is executed and delivery is obtained by the second respondent, the petitioner who is still holding the property is entitled for the electricity service connection. Therefore, in my considered view, merely because the eviction order has been obtained by the second respondent against the petitioner, the electricity service connection which is available shall not be disconnected."*

9.18 மேற்கூறிய தீர்ப்புகளில் ஒருவர் வசித்துவரும் நிலையில் அக்குடியிருப்புக்கான மின்னிணைப்பை மின் துண்டிப்பு செய்ய கூடாது என்பது தெரியவருகிறது. ஆனால் இந்த வழக்கானது மின் கட்டணம் செலுத்தவில்லை என்று மேல்முறையீட்டாளர் மின் துண்டிப்பு செய்வதற்கு தான் முறையிட்டும் மின் துண்டிப்பு செய்யவில்லை என்று வாதிடுவதைப் பற்றி தீர்வு செய்ய விரும்புகிறேன்.

9.19 அடுத்த கோரிக்கை உரிய மின் பயன்பாடு கால இடைவெளியில் மின் துண்டிப்பு செய்து இருந்தால் நிலுவை தொகை கட்ட நிர்பந்தம் ஏற்படுகிறது என்று வாதுரைக்கு எதிர்மனுதாரர் 03/2020 முதல் பொது மக்களின் உயிர் நலனை காத்திடவும் தனிமைபடுத்தி கொள்ளவும் மற்றைய பயன்பாட்டுற்கு மின்துண்டிப்பு செய்ய வேண்டாம் என்ற மின் வாரிய உத்தரவின்படி மின் துண்டிப்பு செய்யவில்லை என்ற வாதம் அக்கால கட்டத்தில் கொரோனா பேரிடர் காலம் என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை. மேலும் பொதுமக்களின் பொருளாதார சிரமத்திற்கு மின்வாரியம் வழங்கிய பொறுப்பான நடவடிக்கை: மேலும் மேல்முறையீட்டாளர் எந்த காலத்திலிருந்து மின் இணைப்பு துண்டிப்பு செய்ய வேண்டாம் என்று உரிமதாரரின் Lr.No.CFC/ REV/FC/REV/AO/RV/F.HT/ D.No 831/ 21, dt.16.12.2021 ல் குறிப்பிடப்படவில்லை என்ற வாதுரை மிக சரியற்ற

முறையீடு. கொரோனா பேரிடர் நடந்த காலத்தில் மின்சாரத்தை பயன்படுத்தலாம். ஆனால் மின் கட்டணம் செலுத்தவில்லையெனில் மின் துண்டிப்பு செய்ய வேண்டாம் என்ற உரிமதாரரின் நிலைபாடு மிக பொறுப்பான நிலைபாடு. இந்நிலைபாடு அனைத்து பயனாளிகளுக்கும் தெரிந்த செயல். மேலும் உரிமதாரரின் பொறுப்பான செயல்பாட்டால் நுகர்வோர்கள் அனைவரும் பயன் அடைந்த நிகழ்வாகும். ஆனால், தானாக வந்து மின்கட்டணம் செலுத்தினால் அதை வசூலிக்கலாம் என்று இருந்த போது இந்த மின் இணைப்பில் அவ்வாறு மின் கட்டணம் செலுத்தவில்லை என்று தெரிகிறது.

9.20 மேலும் உரிமதாரரின் Lr.No.CFC/ REV/FC/REV/AO/RV/F.HT/ D.No 831/ 21, dt.16.12.2021–இல் உரிமதாரர் மிக தெளிவாக *"Futher the defaulted LT services expect domestic category may be disconnected immediately to realize the revenue."* என்று தெரிவித்திருந்ததன் மூலம் 16.12.2021 முன்பு உள்ள காலகட்டத்திற்கு மின்நுகர்வோரிடமிருந்து மின்பயன்பாட்டிற்கு மின் துண்டிப்பு செய்ய வேண்டாம் என்பது உறுதியாகிறது. ஆகவே, உரிமதாரரின் அறிவுறுத்தலில் மின்கட்டணம் நிலுவையில் உள்ள பயனாளியிடமிருந்து மின்துண்டிப்பு 16.12.2021 பிறகு செய்யப்பட்டதன் அடிப்படையில் உரிமதாரர் 17.12.2021 அன்று மின் துண்டிப்பு செய்த செயல்பாடு விதிமீறல் இல்லை என்பது தெளிவாகின்றது.

9.21 மேலும் 01/2021 முதல் 17.12.2021 வரை மின் பயன்பாடு இருந்ததா என்பதை அறிய நான் Evidence Act, 1872 section 35 விதியை ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"35. Relevancy of entry in public record or an electronic record made in performance of duty. An entry in any public or other official book, register or record or an electronic record stating a fact in issue or relevant fact and made by a public servant in the discharge of his official duty or by any other person in performance of a duty specially enjoined by law of the country in which such book, register or record or an electronic record is kept is a relevant fact."*

9.22 மேற்கூறிய Evidence Act, 1872–இன் அடிப்படையில் மின் அளவியின் தரவிறக்க தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டடுள்ளது.

| As per download data | |
|---|---|
| Date | Cum kwh |
| CR. 17.07.23 | 104252.55 |
| 01.06.23 | 104238.67 |
| – | – |
| 01.02.23 | 104238.67 |
| **17.12.21** | **104238.67** |
| 01.12.21 | 103500.78 |
| 29.11.21 | 103443.14 |
| 01.10.21 | 100037.26 |
| 01.08.21 | 93818.88 |
| 01.06.21 | 88369.19 |
| 01.04.21 | 82937.62 |
| 01.02.21 | 76081.90 |
| 01.12.20 | 70630.67 |
| 01.10.20 | 64.094.35 |
| 01.08.20 | 58479.75 |
| 01.06.20 | 52603.16 |

| As per consumer ledger | |
|---|---|
| – | – |
| 08.06.23 Reconnection | 104238 |
| 15.04.23 Inspection | 104238 |
| – | – |
| **17.12.21 Disconnection** | **104238** |
| – | – |
| 29.11.21 | 103450 |
| 30.09.21 | 99730 |
| 27.07.21 | 87590 |
| 27.05.21 PMC BILL | – |
| 27.03.21 | 82710 |
| 29.01.21 | 75820 |
| 30.11.20 | 70550 |
| 29.09.20 | 63950 |
| 27.07.20 | 58430 |
| 27.05.20 | 56720 |

9.23 மேற்கூறிய மின் அளவி தரவிறக்க சான்றுகளின் மூலம் 01/2021 லிருந்து 17.12.2021 வரைக்கும் மின் பயன்பாடு இருந்தது என்பது தெளிவாக தெரிகிறது. அக்காலகட்டத்தில் உரிமதாரர் கொரோன பேரிடர் காலத்தினால் இம்மின் நுகர்வோர்களுக்கு மின் பயன்பாட்டை பயன்படுத்த அனுமதி அளித்துள்ளது தெரியவருகிறது. மேலும் அக்கால கட்டத்தில் மின் பயன்பாட்டை நுகர்வோர் மின்பயன்பாட்டின் அளவிற்கு மின் கட்டணம் செலுத்துவதில் இருந்து எந்த விலக்கும் அளிக்கவில்லை. பேரிடர் காலத்தில் மின் கட்டணம் செலுத்தாத அனைத்து நுகர்வோரிடமிருந்து மின் கட்டணம் செலுத்தாத நிலையில் மின் துண்டிப்பு செய்ய வேண்டாம் என்ற கருணை கால செயல்பாடு அனைத்து பொது மக்களாலும் வரவேற்கப்பட்ட நிகழ்வாகும். ஆகவே, மேல்முறையீட்டாளரின் இம்மின் இணைப்பில் அக்காலகட்டத்தில் மின் இணைப்பு பெற்ற இடத்தில் மேல்முறையீட்டாளரால் வாடகைவிடப்பட்டபோது அதில் மின் பயன்பாடு இருப்பது உறுதி ஆவதால் மின் இணைப்பு பெற்ற மேல்முறையீட்டாளர் மின் கட்டணம் செலுத்த இசைவு பத்திரத்தில் கையொப்பமிட்டு ஒப்பு கொண்டதன் அடிப்படையில் அவரே தான் உரிமதாரருக்கு மின்

கட்டணம் செலுத்துவது சரியான செயலாகும். மேலும் உரிமதாரர் வாடகைதாரரிடம் இருந்து வசூலிக்க வேண்டும் என்ற வாதம் நிராகரிக்கப்படுகின்றது.

9.24 மேல்முறையீட்டாளரின் அடுத்த கோரிக்கையான மனஉளைச்சலுக்கு ரூ.50,000/- இழப்பீடு தொகை வழங்குமாறும் கோரியுள்ளார். இது சம்பந்தமாக நான் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின் குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 7(11)ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"(7) குறைமுறையீடு, சட்டத்தின் 57 (1) வது பிரிவின்படி, ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள உரிமதாரர் கடைப்பிடிக்க வேண்டிய செயல்திறன் அளவுகளில் நுகர்வோர் சேவைத்திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என கண்டறிந்தால், நுகர்வோர் இழப்பீட்டுத் தொகை பெற தகுதியுள்ளவர் என முடிவு செய்யலாம். மேலும், நுகர்வோர் சம்மதித்தால், ஆணையத்தால் இது சம்பந்தமாக வகுக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிட்டுள்ள இழப்பீட்டுத் தொகையைப் பெற ஒத்துக் கொள்ளலாம் என அறிவிக்கலாம்."*

9.25 மேற்கண்ட விதியை கூர்ந்து பார்க்கும் பொழுது நாம் அறிவது ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் அளவுகளில் நுகர்வோரின் சேவைத்திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என கண்டறிந்தால் நுகர்வோர் இழப்பீட்டு தொகையை பெறுவதற்கு தகுதியானவர் என்று முடிவு செய்யலாம் என்று தெரிகிறது. மேலும், ஆணையம், நிர்ணயித்துள்ள செயல்திறன் அளவுகளை உரிமதாரர் கடைபிடிக்காமல் இருந்தால் வழங்கப்படும் இழப்பீட்டு தொகையை தவிர வேறு நஷ்டஈடு வழங்குவதற்கு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளில் வழி இல்லை என்று தெரிகிறது. இந்நிலையில், மின் துண்டிப்பு உரிய காலத்தில் செய்யவில்லை என்று முறையிடும் மனு ஈட்டுத்தொகை வழங்கும் தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானச் செயல்திறச் செந்தரகளுக்கான ஒழுங்குமுறை விதிகள் 2004-இல் கூறப்படவில்லை. மேலும், இச்செயல்திறச் செந்தரங்களுக்கான விதிகள் பேரிடர் போன்ற தடுக்கமுடியாத உரிமம்தாரரின் கட்டுப்பாட்டிற்கு பொருந்தாது என்பதால் விதி 27-இன்படி செயல்படுத்த முடியாது என்பது தெரியப்படுத்துகின்றது. ஆகவே, மேல்முறையீட்டாளரின் இழப்பீடு கோரிக்கை நிராகரிக்கப்படுகின்றது.

10.0 <u>முடிவுரை:</u>

10.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வுகளின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகின்றது.

10.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 48/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திரு. ஆர்.கனகராஜ், – By RPAD
பிளாட் எண்.25, 5/751 A, சபரி சாலை,
மடிப்பாக்கம், சென்னை – 600 091.

2. செயற்பொறியாளர் /இ&ப/கிண்டி,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV துணை மின்நிலைய வளாகம்,
கே.கே. நகர், சென்னை – 78.

3. உதவி செயற்பொறியாளர் /நங்கநல்லூர்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11KV நங்கநல்லூர் துணை மின்நிலைய வளாகம்,
100 feet ரோடு, நங்கநல்லூர், சென்னை – 600 061.

4. உதவி மின்பொறியாளர் /மூவரசம்பேட்டை,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11KV மடிப்பாக்கம் துணை மின்நிலைய வளாகம்,
மடிப்பாக்கம் பேருந்து நிலையம் அருகில்,
மடிப்பாக்கம், சென்னை – 600 091.

5. மேற்பார்வை பொறியாளர், -By email
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV துணை மின்நிலைய வளாகம்,
கே.கே. நகர், சென்னை – 78.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.